## விரைவு நீதிமன்றம், காரைக்குடி

முன்னிலை : செல்வி. செ. ஜெயப்பிரதா, **B.Sc.,B.L.,(Hon's)**

**நீதித்துறை குற்றவியல் நடுவர்,**

**விரைவு நீதிமன்றம், காரைக்குடி.**

2024 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10 ம் நாள் செவ்வாய்க்கிழமை

குற்றவியல் பல்வகை மனு எண்.2866/2024
இன்
ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் :54/2024

சோமசுந்தரம் ......மனுதாரர்/எதிரி

/எதிர்/

கோகிலா .......எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனுவானது, கடந்த 22.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பாக இன்று 10.12.2024-ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பி.நமச்சிவாயம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எஸ்விஎன்.கார்த்திக் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்/எதிரி தரப்பில் ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிட அனுமதிகோரி BNSS 348-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

**1. மனுச்சுருக்கம்**

மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் எதிரிக்கு எதிராக புகார்மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. கடந்த 08.08.2024 அன்று ம.சா.1 குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டபோது சில தவிர்க்க முடியாத காரணத்தால் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை. எதிரிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வழக்கறிஞரை சந்தித்து விவரம் சொல்ல முடியவில்லை. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மனுதாரர்/எதிரிக்கு ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்காமல் போனால் எதிரி தரப்பு வழக்கு நிரூபணம் செய்ய முடியாமல் எதிரிக்கு பெருந்த நஷ்டத்தை ஏற்படுத்தும். எனவே ம.சா.1 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி இம்மனு முன்னிடப்பட்டுள்ளது.

**2.எதிருரை**

எதிர்மனுதாரர்/புகார்தாரர், மனுதாரர்/எதிரிக்கு எதிராக மேற்படி வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கில் கடந்த 08.08.2024 அன்று ம.சா.1 முதல் விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அன்றைய தினம் மனுதாரர்/எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லையென முடித்து வைக்கப்பட்டது. இந்நிலையில் மனுதாரர்/எதிரி தரப்பில் கடந்த 22.10.2024 அன்று ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய BNSS 348-ன் கீழ் மனு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் மனுதாரர்/எதிரியின் உடல்நிலை சரியில்லாததால் வழக்கறிஞரை தொடர்பு கொண்டு வழக்கின் விவரங்களை கூறமுடியாத காரணத்தினால் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்று காரணம் தெரிவித்துள்ளனர். மேற்படி எதிரிக்கு உடல்நிலை சரியில்லாதது குறித்து எந்த மருத்துவ ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் ம.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது மேற்படி எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். மேற்படி மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. மேற்படி மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை**

மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா அல்லது இல்லையா?

**4. பிரச்சனைக்குரிய தீர்வு**

1)இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தாக்கல் செய்திருக்கும் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டிய ஒன்றா என்பது குறித்து பார்க்கும்போது மூலவழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு புகார்தாரர் தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக ஏற்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் கடந்த 08.08.2024 அன்று முதல் விசாரணை செய்தபோது மனுதாரர் தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லையென்று அறியமுடிகிறது. தரப்பினருக்கு உரிய வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்ற இயற்கை நியதியின் அடிப்படையில் இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக மனுதாரர்/எதிரி தாக்கல் செய்திருக்கும் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது, என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு டிசம்பர் 10-ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
நீதித்துறை குற்றவியல் நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.